ஓவியர் லங்கா வின்
மேகலா கலையகம்
தற்போது புதிய முகவரியில்
இயங்குகிறது
புன்னாலைக் கட்டுவன் வீதி
நீர்வேலி வடக்கு,
மீனாட்சியம்மன் கோவில்
முன்பாக
(காளி கோவில்)
நீர்வேலி,

பக்கங்கள் நான்கு | விலை ரூபா: 2-50

# முரசொலி

முரசு 04 ஒலி 143 வெள்ளி 06-07-1990 (ஆனி 22) துல்ஹஜ் 12

● பெயர்ப்பலகைகள்
● ஸ்ரிக்கர்கள்
● உருவப்படங்கள்
தரமான முறையில் செய்து கொடுக்கப்படும்.
ஓவியர் லங்கா வின்
மேகலா கலையகம்
நீர்வேலி.

★ புதுடில்லியில் பேச்சுவார்த்தைகள் நடத்தியபின் தாயகம் திரும்புகையில் சென்னையில் திலகரத்ன சொன்னார்:

# புலிகளுடன் பேச அரசின் கதவு திறந்தே உள்ளது!

"இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்த விடுதலைப் புலிகள் முன்வரலாம். அதற்கான கதவுகள் இப்போதும் திறந்தே இருக்கின்றன"

இவ்வாறு புதுடில்லியில் இந்தியத் தலைவர்களுடன் இலங்கை அரசின் விசேட பிரதிநிதியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு இலங்கை திரும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் நேற்று இலங்கை வெளியுறவுச் செயலாளர் திரு. பெர்னாட் திலகரத்ன செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சர் திரு. இந்திரகுமார் குஜ்ரால், வெளியுறவுச் செயலாளர் திரு. முசுந்த் துபே ஆகியோருடனான பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாக அமைந்தன என்

— 04ஆம் பக்கம் பார்க்க

மாகாண சபை கலைப்பு

## திருத்தச்சட்ட மூலம் பாராளுமன்றில் தாக்கல்

வடக்கு,கிழக்கு மாகாண சபையைக் கலைத்து புதிய மாகாண அரசை ஏற்படுத்துவதற்கான மாகாணசபைதிருத்தச் சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த புதிய மாகாணசபை திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் மாகாணசபை சட்டங்

—04 ஆம் பக்கம் பார்க்க

பலாலியில் படைவீரர் பலர்

## கண்ணிவெடி மூலம் காலிழப்பு என அறிவிப்பு

''பலாலி விமானநிலைய ஓடுபாதையில் துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புலிகள் வைத்த கண்ணிவெடிகளால் இவ்வேளை படைவீரர்கள் பலர்தம் பாதங்களை இழந்தனர்,''

இவ்வாறுநேற்றுதிரு.ரஞ்சன் விஜயரத்ன தகவல் வெளியிட்டார்.

''இப்பாதுகாப்புப்படைவீரர்களுக்குச் செயற்கைக்கால்கள் பொருத்தப்படும்'' என்றும் அவர் சொன்னார் (ஸ்ரீ)

## "புலிகளைப் பிடிக்கும் வரை தேடுதல் தொடர்ந்தே தீரும்"

''கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. விடுதலைப் புலிகளைத் தேடி காடுகளில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்கள் கண்டு பிடிக்கப்படும் வரை இத்தேடுதல் நடவடிக்கை தொடரும்''

மேற்கண்டவாறு பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன நேற்றுத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## மட்டு. நிலைபற்றி ரஞ்சன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எப்பிரச்சினையும் இப்போது இல்லை. நிலைமை வழமைக்குத் திரும்புகின்றன-மின்விநியோகம் மாத்திரமே அங்கு தடைப்படும் நிலை உள்ளது. என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு-ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

## படையின் தொகை அரசு முரண்பாடு

வடக்கு கிழக்கில் விடுதலைப்புலிகளுடனான மோதலில் இதுவரை 302 படையினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று தெரிவித்தார். கடந்த வாரம்

—04ஆம் பக்கம் பார்க்க

## போராளி வீரமரணம்

நேற்று பலாலி முகாமின் வசாவிளான் சென்றிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட நேரடி மோதலில் பிரதீப் என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இவர் கொக்குத்

— 04 ஆம் பக்கம் பார்க்க

மட்டக்களப்பின்

## கதிரவெளியில் விமானத்தாக்குதல்; கல்லடியில் இரு இராணுவம் பலி

மட்டக்களப்பு கதிரவெளிக் கிராமத்தில் நேற்று முன்தினம் பெரும் பொம்மர் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இத்தாக்குதலில் ஒரு சிறுவன் மரணமடைந்துள்ளதோடு பலர் படுகாயமடைந்துள்ளார்கள் பல வீடுகளும் சேதமடைந்தன.

க.அருளானந்தன்(12)என்ற சிறுவனே மரண மடைந்தவ

— 4 ஆம் பக்கம் பார்க்க

அவர்களின் உதட்டசைவிலிருந்து

## துயர்தனைச் சொல்ல வார்த்தை தானேது

திருகோணமலையிலிருந்து கடந்த 14ம் திகதியன்று புறப்பட்ட சுமார் பத்துக்குடும்பங்கள் இன்னோரன்னத் துன்பங்களை அனுபவித்தபின் நேற்றுக்காலை தாளையடி ஊடாக சாவகச்சேரியை வந்தடைந்தனர்.

பிஞ்சுக் குழந்தைகளுடன் கலங்கி, களைத்து அவர்கள் கந்தல் கூடைகளுடன் சாவகச்

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்.மாவட்டஅகதிகளுக்கான

## இரண்டாம் கிழமை சுற்றில் நிவாரணத்தொகை அதிகரிப்பு

தற்போது வழங்கப்பட்டு வரும் அகதிகளுக்கான நிவாரணக் கொடுப்பனவு இரண்டாம் கிழமைக்கான சுற்றில் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது தற்போது ஆகக்கூடுதலாக 200ரூபாவே வழங்கப்பட்டுவருகின்றது.

முதலாம் கிழமைக்கான கொடுப்பனவு விபரங்கள்யாவும் ஒழுங்குபடுத்தப்பட்ட

— 4 ஆம் பக்கம் பார்க்க

போராளிகள் குழு இணைப்பு

## சில குறுக்கீடுகளால் தோல்வி என்கிறார் கலைஞர்

''இலங்கை போராளிகள் குழுக்களுக்குள் இடையே ஒற்றுமையை ஏற்படுத்த 1983ம் வருடத்தில் இருந்தே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.'' என்று தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

''ஆனால் சில குறுக்கீடுகள் காரணமாக அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

## வந்தாரை வாழவைக்கும் மண்ணாக தென்மராட்சி

''வந்தாரை வாழவைக்கும் தமிழகமே... என்று கலைஞர் மு. கருணாநிதியின் ஓர் வசனச் சொற்றொடர் 1952-ல் 'பராசக்தி' திரைப்படத்தில் உணர்ச்சி பூர்வமாக இடம்பெற்றது அந்த வகையில் இன்று குடாநாட்டில் பலவித இன்னல்களுக்கு இலக்காகி அடைக்கலம் தேடும் அப்பாவி மக்களுக்கு உறுதுணையாக நின்று உதவுகிறது தென்மராட்சித் திருமண். இங்கு பாடசாலைகள். ஆலயங்களில் மட்டுமென்றில்லை, பல வீடுகளிலும் பல்லாயிரக் கணக்கான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்

— 04ஆம் பக்கம் பார்க்க

# நேற்று பன்குளத்தில் கடும் மோதல் 14இராணுவம்பலி, ஆயுதங்கள்மீட்பு

திருகோணமலை பன்குளப் பகுதியில் நேற்றுக் காலை 11.15 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குமிடையே பாரிய மோதல் இடம் பெற்றுள்ளது.

இந்த மோதலில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பல இராணுவத்தினர் படுகாயமடைந்தாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தாக்குதலில் இராணுவத்தினரிடம் இருந்து பெருமளவ ஆயுதங்களு[illegible] களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு.ஏ.கே.எல்.எம்.ஜி-1, மகஸின்,ரீ. 81-3, [illegible] 56 1-4 [illegible] -5, ஜே.அ[illegible]

# புலிகளின் வாழ்வில் சுகபோகம் கிடையாது

எமது இயக்கப் போராளிகள் எவரும் சுகபோகமாக வாழ்வது கிடையாது. எங்களது அமைப்பினர் மதுபானத்தை மருந்துக்கும் பாவிப்பது கிடையாது. வீண் செலவுகள் விலக்கப்பட்டுள்ளன. தலைவர் தொடக்கம் போராளிகள் வரை யாவரும் புனிதமான போக்கைக் கடைப்பிடித்து வருகின்றோம். புகைபிடிப்பதும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. செலவுகள் அனைத்துக்கும், கணக்குக்குப் பொறுப்பானவர்களுக்கு வகை சொல்ல வேண்டும். இது மரபாகி விட்டது.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகி கொக்குவிலில் இடம் பெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.(28கி)

# குமணை முதல்-பருத்தித்துறை வரை மண்ணையும் மக்களையும் காக்கும் பொறுப்பு புலிகளுக்குண்டு

-யோகி

(திருநெல்வேலி)

இலங்கை அரசாங்கம் பாதுகாப்புப்படைகளுக்குப் பல கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. மேலும் ஐந்நூறுகோடி அண்மையில் ஒதுக்கியுள்ளது. தேசியம் பேசி நிதி சேகரித்து தமிழீழ மக்களை அழிக்கின்றது.

என கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் இடம் பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகரத்தினம் யோகி தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;-

''தமிழீழ மீட்பில் ஈடுபடும் விடுதலைப் புலிகள், அரச கடற்படை, வான் படை, காவற்றுறை, சிங்களக்காடையர் இவர்களுக்கெல்லாம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

அதேவேளை, நாம் குமணையில் இருந்து பருத்தித்துறை வரை பரந்துபட்ட எமது மண்ணை - ஈழத்தைக் -காக்க வேண்டும்.

ஆகவே, எமது படைப் பலம் மேலும் பல மடங்கு பெருக வேண்டும். ஆயுதப் பலமும் அதிகரிக்கப்பட வேண்டும். ஆகவே நீண்டகால குறுகியகால செயற் திட்டங்களைத் தீட்டியுள்ளோம். எமது தமிழீழ மீட்பு நிதிக்கு உத்வேகத்துடன் உங்கள் பங்களிப்பைத் தர வேண்டும், இம்மீளளிப்புக் கடன் விபரங்களை வழங்குகின்றோம். சகல தமிழ்ப் பேசும் குடும்பங்களும் பங்காளிகளாக மாற வேண்டும்.

எமது போராட்டம் எக்காரணம் கொண்டும் இனி ஓயப்போவதில்லை'' என்றார். (கி)

# கடற்படையினரின் சூட்டுக்கு காரைநகரில் இரு பெண்கள் பலி

காரைநகர் கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இரு பெண்கள் பலியானார்கள். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை நிகழ்ந்துள்ளது.

திருமதி சரவணய் (50) அவரது மகள் (30) ஆகியோரே இறந்தவர்களாவர். இவர்கள் இருவரும் கடற்படை முகாமுக்கு அருகிலுள்ள தமது காணிக்கு தேங்காய் பறிக்கச் சென்றபோது சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்த பெண்மணிகளின் சடலங்களை ஏற்றுவதற்காகச் சென்ற வண்டியின் மீதும் கடற்படையினர் சுட்டபோது வண்டியில் பூட்டப்பட்டிருந்த மாடு ஒன்றும் பலியானது. (கி)

# சிறிய செய்திகள்

## இணக்க சபை புனரமைப்பு

பளை இணக்கசபை புனரமைப்புக் கூட்டம் கடந்த சனிக்கிழமை பளை மகா வித்தியாலயத்தில் பச்சிலைப் பள்ளி அரசியல் பொறுப்பாளர் செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரால் ஐந்து உறுப்பினர்களும் பொதுமக்களால் ஐந்து உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டு அவர்களில் இணக்க சபையின் செயலாளராக நா. பூபாலசிங்கமும் உதவிச் செயலாளராக மு. குமாரவேலுவும், பொருளாளராக பொன். தில்லைநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர். (ப-3கி)

## புலிகளின் கட்டுப்பாட்டில்

காங்கேசன்தறை சிமெந்துத் தொழிற்சாலை புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுபற்றிய மேலும் விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (கி)

## விவசாயிகளுக்கு அறிவிப்பு

தீவுப்பகுதியில் விவசாயத் தேவைக்கு பயன்படுத்தாமல் கிடக்கும் காணிகள் யாவும் விவசாயத் தேவைகளுக்கு பயன் படுத்த வேண்டுமென்று அறிவிக்கப்படுள்ளது.

அப்படி தவறும் பட்சத்தில் காணியற்ற விவசாயிகளுக்கு அக்காணிகளில் விவசாயம் செய்ய காணி உரிமையாளர் கொடுக்க வேண்டு மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் வப்பகுதி சிற்றூரவையின் காண்காணிப்பிற்கு இதுவிடப்பட்டுள்ளது. (24கி

## பயிலுநர்க்கு வேண்டுகோள்

அவ்வப் பகுதிகளில் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள மக்களிற்கு பயிலுநர், ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவிற்கு உடைகள், 'உணவுப்பொருட்கள் ஆகியவற்றைச் சேகரித்துக் கொடுப்பதுடன் அகதிகள் முகாம்களிற் சுகாதார நிலைமைகள், முதலுதவிச் சிகிச்சை அளித்தல் போன்ற சேவைகளை நல்கும் படியாக யாழ். மாவட்டப் பயிலுநர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

இதற்குச் சகல பிரிவுகளில் உள்ள கிளைகள் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியாகவும் பொதுமக்களும் தாராளமாக உதவி செய்யும் படியாகவும் மேலும்

## இல்லை, இல்லை எதுவும் இல்லை

யாழ்நகர் கடைவீதி வெறிச்சோடிய நிலையில் மக்களின் சேவையில் உள்ள யாழ் பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில்நிர்வாகிகளின் ஒருமித்த குரல் 'இல்லை' என்பதே.

உள்ளூர் உற்பத்திகளைத் தவிர அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கே மக்கள் பெரும் அவலப்படும் நிலையில் காணப்படுகின்றனர்.

பலநோக்குக் கூட்டுறவுக் கடைகளின் மீதமாக உள்ள பொருட்கள் அதிகமாக ஆடம்பரப்பொருட்ளாகவே காணப்படுகின்றது. அத்தியாவசிய தேவைப் பொருட்களான சீனி, மா, தீப்பெட்டி போன்றன யாழ் கடைகளில் காண்பது அரிதிலும் அரிதாகவே உள்ளது. (64 கி)

## மே. ஜேர்மனி தகுதி

உலகக் கிண்ண உதை பந்தாட்ட இறுதிப் யாட்டத்தில் கலந்துகொள்ள மேற்கு ஜேர்மன் அணி தகுதி பெற்றது

நேற்று முன்தினம் நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் மேற்கு ஜேர்மனி இங்கிலாந்தை தோற்கடித்தது.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற 13வது உலகக் கிண்ணப் போட்டியிலுமஆர்ஜென்ரினாவும், மேற்கு ஜேர்மனியும், இறுதி ஆட்டத்தில் மோதின என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதி ஆட்டம் 8ஆம் திகதி றோமில் நடைபெறும், மூன்றாவது இடத்திற்கான மோதல் 7ஆம் திகதி நடைபெறும். இங்கிலாந்தும், இத்தாலியும் இ஁ஆட்டததில் மோதும் (16 கி)

## தச்சன்தோப்பு மக்கள் உதவி

(நாவற்குழி)

இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்காகத் தச்சன்தோப்புக் கிராமாபிவிருத்திச் சங்கத்தினர் அவ்வூர் மக்களிடமிருந்து 6½ புசல் நெல் சேகரித்துத் தென்மராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ரஞ்சனிடம் கையளித்துள்ளனர்.(ப.5கி)

## தள்ளாடியில் ஷெல் தாக்குதல்

தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து கடந்த செவ்வாய் இரவு கடுமையான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

இந்த ஷெல்களில் சில மன்னார்க்கோட்டை, தாழ்வுபாடு, எழுத்தூர் ஆகிய பகுதி... வெடித்தன.

## இவர்களுக்கு உதவுவீர்களா?

வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்த, வைத்தியநாதன் திலகவதி, வைத்தியநாதன் ஜெயகுமாரி, ஐயம்பிள்ளை தனலக்ஷ்மி ஆகியோர் இராணுவ கெடுபிடிகளினால் வவுனியாவில் இருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து நல்லூர் ப. நோ. கூ. சங்கக் கிளை. இல 2 -ல் அகதிப் பொருட்கள் எடுக்கச் சென்ற சமயம் அவர்களின் அடையாள அட்டை மற்றும் மருத்துவ துண்டு ஆகியன தொலைந்து விட்டதாக அறிவிக்கப்படுகின்றது. கண்டு எடுத்தவர்கள் முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

## சரசாலையில் முதலுதவிப் பயிற்சி

சரசாலையில் பொது நிறுவனங்களினால் பொதுமக்களுக்கு முதலுதவிப் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டுவருகின்றது. அயற் கிராமத்தினரும் இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## வவுனியாவில் பூசைஇல்லை

வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயம், வவுனியா கந்தசுவாமிகோவில் வவுனியா வைரவர்கோவில் உட்பட பல கோவில்கள் வவுனியா மாவட்டத்தில் நித்தியபூசைகள் செய்யமுடியாத நிலையில் உள்ளன

இவ் ஆலயங்களில் வசித்த பிராமண பூசகர்கள் தற்பொழுது இடம் பெயர்ந்துள்ளனர்.

## புகுமுக மாணவருக்கு

யாழ் இந்துக் கல்லூரியிலும், இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெற்றுவந்த பல்கலைக்கழகப்புகுமுக மாணவர்களுக்கான ஜி. ஈ. எல். ரி. வகுப்புக்கள் இன்று தொடக்கம் யாழ். பல்கலைக்கழத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல மாணவ மாணவிகளும் அதற்குப் பொறுப்பான ஆசிரியர்களும் சமூகமளிக்குமாறு பயிற்சிக்குப் பொறுப்பான டி. ஆர். அருமைநாயகம், என். தேவபாலசிங்கம் ஆகியோர் அறிவித்துள்ளனர். (4, 64-கி)

பழந் தமிழர் வீரக் கோலங்கள்
கோலம் : 3 (முன் தொடர்ச்சி)

## சென்று வா மகனே; செருமுனை நோக்கி!

''அச்சம் தவிர்த்திடுகஅய்யனே! இறந்தபின்னர் எச்சமெனத்தமிழன் விட்டுச் செல்வது மானமொன்றே! அந்த மானத்தைப் பகைவர் காலடியில் பூவாக்கிப் போட்டுவிட்டு, சொந்த வாழ்க்கைதனை சுகமாக ஆக்கிக் கொள்வோன் சோற்றாலடித்த பிண்டமாவான்- நூல் அறுந்தக் காற்றாடிப் பட்டமாவான்!''

ஓலை கொண்டு வந்தவனே! உடன்
ஓடு நீ; உன் ஏழு மன்னரிடம்! வீர
வேலை, கரம் ஏந்திவிட்டான்; இந்த
விடலையாம் செழியன் என்று நான்
விடை தந்ததாக அறிவித்திடுக!'' என்றான்!
''தலையாலங்கானத்துப் போர்க்களம் புகத்
தயாராகட்டும் தென்பாண்டிப் படை'' என்றான்!

அப்போது,

மாங்குடி மருதனார் இடைமறித்து; ''பாண்டி
மன்னர் குலக் கொழுந்தே! இந்தப் பாவலன்,
மறுப்பதாக எண்ண வேண்டாம் ........
மாற்றார் வலிமையினைக் காணும்போது
தோற்றோம் இறுதியில் நாம் என்றே முடிவு வரும்!
எச்சரித்தல் என் கடமையென்ற காரணத்தால்,
இனியும் சிந்தித்துப் போர்தவிர்த்தல் நலமாகும்''
என்றார்!

மீன்கொடிப் பாண்டியனோ; மாங்குடி.
மருதனார் மொழி கேட்டு, அவர் முன் சென்று;
'மான்குட்டி போல் இருக்கின்றேன், அதனாலே
மாற்றார் எனும் புலிபபோத்தின் வாய்க்குள்ளே
இரையாக மாறிப்போவேன் என்று
இரங்கலுரை இப்போதே ஆற்றுகின்றீர்.
அச்சம் தவிர்த்திடுக அய்யனே! இறந்தபின்னர்
எச்சமெனத் தமிழன் விட்டுச் செல்வது மான
மொன்றே !''
அந்த மானத்தைப் பகைவர் காலடியில் பூவாகிப்
போட்டுவிட்டு,

சொந்த வாழ்க்கைதனை சுகமாகஆக்கிக் கொள்வோன்
சோற்றாலடித்த பிண்டமாவான்- நூல் அறுந்தக்
காற்றாடிப் பட்டமாவான்!

தமிழுக்குத் தலைவணங்கும் நெடுஞ்செழியன் நான்;
தகவிலார்க்குத் தலைவணங்க ஒப்பமாட்டேன்!
எழுவரென்ன எழுபது கோடிப் பேர்
எட்டுத் திசையும் முரசு கொட்டி,
எதிர்க்க வரினும் என்னை- இந்த
இளையோன் எதற்கும் இளையான் என்ற
இலக்கியத்தைப் படைக்கின்றேன் போர்க்களத்தில்!

பாண்டியத்துப் பெருமண்ணில், வெறும்
ஆண்டிகளோ வாழ்கின்றார்? இல்லை! இல்லை!
குலமாதா பாண்டித்தாய்; கோழைகளைக்
குழந்தைகளாய்ப் பெற்றெடுக்கவில்லை! இந்த
நிலமகளின் பெருமைக்கு மேலும் பெருமை,
நெடுஞ்செழிய இளைஞனவன் சேர்ப்பான் என்று
நம்பிடுவீர்; நாட்டோரே! நல்லோரே!'' என முழக்கி;
''நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்'' எனும்
நரம்பெலாம் வீரம் மீட்டும் புறப்பாட்டை
நாடாளும் இளமன்னன் இயற்றலானான்!

அப்பாட்டில் ..................'' (நாளை தொடர்கிறது)

'சங்கத் தமிழ்' நூலிலிருந்து - கலைஞர் கருணாநிதி அவர்கட்கு நன்றியுடன்'

தேர்வு : 'கங்கா'

# தமிழகத்தில் அகதிகளாகவிருந்து தமிழீழத்திலும் அகதியானோம்

இதனால் சலிப்பை ஆறு என்ற இடத்தில் தங்கி நின்று பீரங்கிப் படகு வேறு திசையை நோக்கி நகருவதை அவதானித்து அவர்களின் கண்களில் படாது குச்சவெளியை கடந்தோம். குச்சவெளி இராணுவ முகாமைக் கடந்து வரும் போது பலர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

நாம் வரும்போது ஹெலி தாக்கியதால் எம்முடன் வந்த இருவர் பலியாகினர். திருகோணமலையைப் பொறுத்த வரை தமிழர்களுக்கு அங்கு பாதுகாப்பு இல்லை.

கடந்த 1985-ம் ஆண்டிலும் எமது வீடுகள் எரிக்கப்பட்டு நாம் அங்கிருந்து விரட்டப்பட்டோம். அதனால் 1985-ம் ஆண்டிலிருந்து 1988-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை இந்தியாவில் அகதிகளாக இருந்தோம்.

தமிழகத்தில் மண்டபத்திலிருந்து சீர்காழி வரை இருந்த புயல் பாதுகாப்புக் கட்டிடங்களில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களில் நாம் தங்கியிருந்தோம். ஆரம்பத்தில் தமிழகத்தில் எம்மை மீன்பிடி தொழிலில் ஈடுபட அனுமதித்த போதிலும் இறுதிக் காலகட்டத்தில் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டது,

இப்போது எமக்கு தமிழகத்திற்கும் போக கூடிய சூழ்நிலை இல்லை என்றே கருதுகிறோம். தமிழனுக்கு எங்குமே பாதுகாப்பு இல்லை என்பதை உணருகின்ற நாம் சிங்களக் காடையர்களின் கைகளினால் கொலை செய்யப்படுவதை விரும்பவில்லை எனக்குறிப்பிட்டார்.

திருகோணமலை வீரநகரைச் சேர்ந்த ஞானச் சந்திரன் என்பவரிடம் இங்கு வந்தபின் பொது ஸ்தாபனங்கள் ஏதாவது உதவியளித்திருக்கின்றனவா? எனக் கேட்டபோது அவர் சொன்னார்.

## செஞ்சிலுவைச் சங்கம் உதவி வழங்க மறுப்பு

யாழ் மாவட்டத்தில் பல தொண்டர் ஸ்தாபனங்கள் அகதிகளுக்கு உதவி வழங்கி வருவதாக அறிகிறோம். ஆனால் வடமராட்சி கிழக்கில் சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் ஒருவாரத்திற்கு மேலாக இருக்கின்றோம். எமக்கு எந்த ஒரு ஸ்தாபனங்களும் உதவி வழங்கவில்லை. எம்மை இந்தக் கிராம மக்களைத் தவிர வேறு எவருமே திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. இந்தப் பகுதி கிராம சேவகர் வந்துபார்த்து எமக்குப் பங்கீட்டு உணவுப் பொருள்கள் வாங்க ''பெர்மிட்'' தந்தார். ஆனால் இங்கு உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் போதியளவு உணவுப் பொருள்கள் இல்லை. அரிசிமட்டும் தான் சில கடைகளில் இருக்கிறது. சுகாதார வசதிகள் இல்லாமல் நாம் பெரிதும் கஷ்டப்படுகிறோம். செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் ஸ்தாபனங்களை நாம் அணுகியபோது அவர்கள் எமக்கு உதவி வழங்க மறுத்துவிட்டார்கள். செஞ்சிலுவைச்சங்கத்திடம் எமக்குச் சுகாதார சேவையாவது வழங்கும் படி கேட்டோம். ஆனால் அவர்கள் அந்த உதவியைக் கூட அவர்கள் எமக்கு வழங்கவில்லை. செஞ்சிலுவைச் சங்கம் யாழ். நகரில் உள்ளவர்களுக்குத்தான் உதவி அளிக்கும் எனவும் வடமராட்சி கிழக்கிற்கு ''போரூட்'' நிறுவனம் உதவி வழங்கும் எனவும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் எம்மிடம் தெரிவித்தனர்.

அகதிகளுக்கு உதவி வழங்குவதிற் கூட இந்தத் தொண்டர் ஸ்தாபனங்கள் பாரபட்சம் காட்டுவது வேதனையாக இருக்கிறது என்றார்,

## அகதி முகாம்களுக்கு ஒரு விஜயம்

தாளையடியிலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பால் இருக்கும் மருதங்கேணிப் பாடசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் அகதி முகாமிற்குச் சென்றோம்.

இம்முகாமில் 35 குடும்பங்கள் மொத்தம் 100 பேர் வரை இருந்தனர். இந்த அகதிமுகாமில் உள்ளவர்களுக்கு அப்பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், மாணவர்களும் பெரிதும் உதவி வழங்கி வருவதை அவதானிக்க முடிந்தது: சுகாதார வசதிகளைப் பேணுவதிலும் அந்த அகதிகளுக்கு அப்பாடசாலை அதிபர் உதவி வழங்கி வருகிறார், 100 பேருக்குமாக ஒரே ஒரு மலசலகூடம் இருந்தபோதிலும் குறைந்த வசதிகளை வைத்துக்கொண்டு சுத்தமாக அந்த அகதி முகாமை வைத்திருப்பதில் அங்கு இருப்பவர்கள் முயற்சி செய்துவருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது,

முதல்நாள் அப்பாடசாலைக்கு அகதிகள் வந்ததும் அப்பாடசாலையில் உள்ள மாணவர்கள் தமது மதிய உணவை அவர்களுக்கு வழங்கியதாகவும், அதன்பின் அவ்வூர் மக்கள் தமக்கு உதவியளித்து வருவதாகவும் அங்கு தங்கியிருக்கும் அகதி ஒருவர் தெரிவித்தார்.

இம்முகாமில் உள்ள அகதிகள் பலர் தமது உறவினர்களையும், தாய்தந்தையையும் தவறவிட்ட நிலையில் வேதனையுடன் காணப்பட்டனர்,

திருமலை 10-ம் நம்பர் என்னுமிடத்தை சேர்ந்த எஸ். மதனமோகன் (25 வயது) என்பவர் சொன்னார் :-நாம் வன்மையாக ஏதாவது பிரச்சனை என்றால் சலி பையில் வந்து நின்று போவோம். இம்முறையும் ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டபோது நாம் வீட்டை விட்டு வெளியேறினோம். ஆனால் எமது அப்பா வெளியேறவில்லை. அவர் பிரச்சனை பெரிதாக வந்தால் வருகிறேன். நீங்கள் போங்கள் என்றார் அடுத்தநாள் அப்பாவால் வெளியேற முடியாமற் போய்விட்டது.

அப்பாவுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியாது ஆனால் எமது வீடு முற்றாக எரிக்கப்பட்டு விட்டதாக அறிந்தோம்.

இம்முகாமில் கடந்த 14-ந் திகதி ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த பெண் குழந்தை பிறந்து இரண்டு நாட்கள் கட்டுப் கழிந்த நிலையில் கால்நடையாக நிலாவெளிவரை நடந்து வந்து பின்னர் படகு ஒற்றில் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் இங்கு வந்து சேர்ந்தாகத் தெரிவித்தார் .(கி)

—இரா. துரைரத்தினம்

முருங்கன் 'கஜு பாமில்'

# சிங்களவரைக் குடியேற்ற இராணுவம் தீவிர முயற்சி

கொண்டச்சி 'கஜுபாமில்' மீண்டும் சிங்களவரைக் குடியேற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பண்ணையில் குடியேற்றப்பட்ட சிங்கள கிராமவாசிகள் தற்பொழுது அனுராதபுரத்தில் அகதியாக இருந்து வருகின்றனர்.

இந்தப் பண்ணையைக் கைப்பற்றி அங்கு மீண்டும் சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்ளும் பொருட்டு புத்தளத்திலிருந்து சுமார் 5000 பேரைக் கொண்ட இராணுவ அணி யொன்று அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அணியினர் புத்தளத்திலிருந்து பதினைந்து மைல் தூரத்திலுள்ள பூக்குளம்பகுதியில் விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு அங்கு தற்பொழுது கடுமையான மோதல் இடம்பெற்று வருகின்றது.

இதேவேளை வவுனியாவிலிருந்தும் முருங்கனை நோக்கி மற்றொரு இராணுவ அணி புறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கொண்டச்சி 'கஜுபாம்' சுமார் ஆறாயிரம் ஏக்கர் விஸ்தீரணத்தை உடையது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் சிங்களக் கிராமவாசிகள் இங்கு குடியேற்றப்பட்டு அவர்களுக்குச்சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

பூக்குளத்தில் முன்னேற முடியாது சிக்கியுள்ள இராணுவத்தினருக்கு உதவியாக இப்பகுதியில் பரவலாக ஆகாயத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் பூர்வீக தமிழ்க் கிராமங்களான முள்ளிக்குளம் கொண்டச்சி, கொக்குப்படை சிலாபத்துறை, அரிப்பு மறிச்சுக்கட்டி போன்ற இடங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை அடுத்து அப்பகுதியில் குடியிருந்தோர் அகதிகளாக வெளியேறி வேறு பாதுகாப்பான பகுதிகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை மடு ஆலயம் முருங்கன், வங்காலை பகுதிகளில் ஆயிரக்கணக்கான அகதிகள் தங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (கி

## ஆஸ்பத்திரிக்கு ஜெனரேட்டர்கள்

பளை, சாவகச்சேரி, செம்பியன் பற்று அரசினர் வைத்தியசாலைகளுக்கு விரைவில் ஜெனரேற்றர்கள் யாழ்ப்பாணம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் வழங்கப்படவுள்ளதாக அறியப்படுகின்றது. (ப-3கி)

## சத்திரசிகிச்சை நிலையம்

(நாவற்குழி)

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு புதிய சத்திர சிகிச்சை மண்டபம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் த. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்ற இவ் அடிக்கல் நாட்டு வைபவத்தில் பதில் வைத்திய அதிகாரி டேவிட் முன்னாள் கைதடி பொறுப்பாளர் சிவாவின் தாயார் திருமதி பேபி சரோஜினி குப்புசாமி ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டினார்கள். (ப 5- கி)

## வீரவேங்கைகள் நினைவாக

தமிழீழ விடுதலைப்போரில் வீரசுவர்க்கம் புகுந்த எழுதுமட்டுவாழ், கிளாலிப் பகுதியைச் சேர்ந்த வீரவேங்கைகள் கப்டன் சிவா, லெப் கருணா, 2ம் லெப் ஜெகன், விக்னா ஆகியோரின் உருவப் படங்கள் எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

இவ் வைபவத்தில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் எஸ். பி. கே பாப்பா, பச்சிலைப்பள்ளி அரசியற் பொறுப்பாளர் செல்வராசா, கொடிகாமம் அரசியற் பொறுப்பாளர் ராகுலன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஒவ்வொரு உருவப்படமும் வேங்கைகளின் பெற்றோர்களினால் திறந்து வைக்கப்பட்டு மலர்மாலைகள் சூட்டப்பட்டன.(ப. 3 கி)

# முருங்கனில் 2000 அகதிகள் கவனிக்க எவருமே இல்லை

மன்னார் முள்ளிக்குளத்தில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலை அடுத்து அங்குள்ள கிராமவாசிகள் அனைவரும் முற்றாக வெளியேறியுள்ளனர்.

இவர்களில் சுமார் இரண்டாயிரம்பேர் முருங்கன் மகாவித்தியாலயத்திலும், ஏனையோர் மடு ஆலயத்திலும் அகதிகளாகத்தங்கியுள்ளனர்.

முருங்கன் மகாவித்தியாலயத்தில் தங்கியிருப்போருக்கு அக்கிராமத்தைச் சேர்ந்தோரே உணவு வழங்கிவருகின்றனர். அரச அல்லது சமூகஸ்தாபனங்கள் எதனினதும் உதவி இவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

அத்துடன் இந்தமுகாமில் வாந்திபேதி, மற்றும் தொற்று நோய்கள் வேகமாகப்பரவி வருவதாகவும் மருத்துவ வசதிகள் எதுவும் அற்ற நிலை காணப்படுவதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள். (கி)

## காவலூர் நிலைமை

(காவலூர்)

ஷெல் தாக்குதல்கள், கடற்படையின் பீரங்கித் தாக்குதல்களினால் காவலூரின் பல கட்டிடங்கள், வீடுகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன. கரையோரப் பகுதி மக்கள் அச்சம் காரணமாக வேலணைப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர். காவலூர் பட்டின வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

(24-கி)

# விழுந்தது 'சின்னப்பையன்' அழிந்தது ஹிரோஷிமா

ஓர் அமெரிக்க போர் விமானம் வேவு பார்ப்பதற்காக ஹிரோஷிமா நகர் மீது வட்டமடிக்கிறது. சில நிமிடங்களில் திரும்பி வந்து எல்லாம் ''க்ளீயர்'' என்று அணுகுண்டைத் தூக்கி வரும் 'எனோலாகே' எனும் விமானத்துக்கு அறிவிக்கிறது.

சின்னப்பையன் (Little Boy) எனப் பெயரிடப்பட்டதும், 10' நீளமும் 28'' அகலமும் 9000 பவுண்ட் எடையும் கொண்ட அந்த அணுக்குண்டு விமானத்தில் ஏற்றப் பட்டது, விமானத்தை ஓட்டிச்சென்ற விமானி 'வான்கிர்க்' தமது 22வது வயதுக்குள் 64 முறை பல நாடுகளில் குண்டுகளை வீசி இருக்கிறார்.


விமானம் மேலெழுந்து பறக்கத் தொடங்கியது. சுமார் 3000 அடி உயரத்தில் பறக்க ஆரம்பித்தது. விமானத்தின் கீழ் பகுதியிலுள்ள ஒரு கொக்கியை, ஒரு பட்டனை அழுத்துவதன் மூலம் விலக்கினால் குண்டு 'ரிலீசாகும்.' குண்டு போடவேண்டிய இடம் வந்தவுடன் விமானக் குழுவில் ஒருவர் ''பாலம் வந்து விட்டது; குண்டை வீசலாம்'' என்று குரல் கொடுக்க விமானத்திலிருந்த அனைவரும் கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டனர். சக விமானியின் கை பட்டனை நோக்கி நகர்ந்தது.

1945 ஆகஸ்ட் 6ந் தேதி காலை 8,15 ஹிரோஷிமா நகர் மீது 'சின்னப்பையன்' என்ற அந்த அணுக்குண்டு செங்குத்தாக இறங்கியது. பயங்கர உஷ்ணத்தையும் புகையையும் கக்கியவாறு இடியோசனையுடன் குண்டு வெடித்தது. குண்டு வெடித்த இடத்தில் நாய்க் குடை வடிவத்தில் புகை மண்டலம் விசுவ ரூபம் எடுத்தது. குண்டு வெடிக்கும் போது 5400 பாகை Fபரனைட் உஷ்ணத்தை வெளிப்படுத்தியதால் எங்கும் எல்லாமே நெருப்புமயமாக இருக்கிறது.

விமானம் வெகு தொலைவிற்கு சென்ற பின்னரும் கூட விமானக் குழுவினால் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட வெளிச்சத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. விமானத்துக்குள்ளேயே பலர் தடுமாறிக் கீழே விழுந்து பயத்தில் அலற ஆரம்பித்தனர், இந்த விமானக் குழுவில் இடம் பெற்றிருந்தவர்களில் பலர் இதை விரும்பாவிட்டாலும், தங்களுக்கு இடப்பட்ட பணியை நிறைவேற்றவேண்டி நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். இக்குழுவில் இருந்த சிலர் அந்தக் குண்டு விளைவித்த சேதத்தைக் கண்டு பொறுக்க மாட்டாது தற்கொலைசெய்து கொண்டனர்.

(நன்றி — ஆனந்த விகடன்)

MURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRILANKA 06-07-1990 வெள்ளிக்கிழமை




# முல்லையில் இருந்து யாழ். வர 100ரூபா; அகதிகள் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கியுள்ள திருமலை அகதிகள் யாவரும் யாழ்ப்பாணம் நோக்கியே வரமுயற்சிக்கின்றார்கள். யாழ்வருவதற்கு ஒவ்வொருபிரயாணியிடம்இருந்தும் 100ரூபாவாங்கப்படுவதனாலே பலர் இங்குவராதுள்ளனர். அங்குள்ள அகதிமுகாம்களில் உணவுக்குபெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இவ்வாறு நேற்று முல்லைத்தீவில் இருந்து யாழ்வந்த திருமலை அகதிகள் தெரிவித்தனர். இரு பஸ்களில் இவர்கள் முல்லைத்தீவில் இருந்து வந்திருந்தனர். (03)

# ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியின் சேவை நேர விபரங்கள்

மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் இன்றும் நாளையும் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியுள்ள காசோலைகளை மாற்றும் வேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

திங்கள் முதல் காலை 9 மணியில் இருந்து 10 மணி வரை வழமையான மட்டுப்படுத்தப்பட்ட பணக்கொடுக்கல் வாங்கல் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கியின் பிரதேச காரியாலயமும் நவீன சந்தைக் கிளையும் தற்போது ஸ்ரான்லி வீதிக்கிளையிலேயே இயங்குகின்றது. (3)

### அகதிகள் சென்று கருணாநிதிக்கு

# தொல்லை கொடுப்பதை அரசு விரும்பவில்லை என்கிறார் ரஞ்சன்

"இலங்கையில் நிகழும் அசம்பாவித சம்பவங்களின் எதிரொலியாக பெருமளவில் அகதிகள் தமிழகத்துக்குச் சென்று தமிழக முதலமைச்சர் திரு மு.கருணாநிதிக்குத் தொல்லை கொடுப்பதை நாம் விரும்பவில்லை".

இவ்வாறு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு,ரஞ்சன் விஜயரத்ன நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகளின் செயற்பாடுபற்றிய அரசின் நிலை விளக்கும் பிரசுரங்கள் வடபகுதி மக்களுக்கு விமானம் மூலம் போடப்படும் என்றும் அவர் சொன்னார். (ஸ்ரீ

## புலிகளுடன்

றும் அவர் குறிப்பிட்டார்.

வெளியுறவு அமைச்சர் திரு. ஹரல்ட் ஹேரத் அளித்த கடிதத்தைத்தான் ஒப்படைத்ததாகவும் அவர் சொன்னார்.

"போர்நிறுத்த அடிப்படையில் ஆயுதங்களைக் கையளிப்பதென்ற உறுதிமொழியை விடுதலைப் புலிகள் நிறைவேற்றத் தவறிவிட்டனர்" என்றும் சொன்னார் அவர்.

இதற்கிடையில் இலங்கையின் நிலைமையில் இந்திய அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டை, மனப்போக்கை இலங்கைஅரசு பாராட்டுகிறது என்று திரு. திலகரத்ன கூறினார் என்று பி.ரி.ஐ. செய்திதாபனம் நேற்றிரவு தெரிவித்தது.

புலிகள், அரசு போரில் இந்திய அரசு தலையிடாது என்ற உறுதிமொழியை திரு. குஜ்ரால் தமக்கு அளித்ததாகவும் திரு, திலகரத்ன தெரிவித்ததாகவும் இச்செய்தி மேலும் தெரிவித்தது. ஸ்ரீ

## திருத்தச்...

களுக்கு ஒழுக நடக்காவிட்டால்அவரைபதவியில்இருந்து அகற்ற மாகாணசபை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

அத்துடன் மாகாணசபையில் ஒரு குறிப்பிட்ட தொகையிலும் குறைவான உறுப்பினர்களே அங்கம் வகிப்பார்களேயர்னால் அந்த சபை தானாகவே கலைந்து விட்டதாகவே கருதப்படும் என்ற புதிய ஓர் சட்டதிருத்தமும் புகுத்தப்பட்டுள்ளது.

இவற்றுடன் பிரிவினைக் கோரிக்கையை தடுக்கும் ஆறாவது திருத்தச் சட்டமூலமும் அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மாகாணசபைக்கான புதிய திருத்தச்சட்ட மூலங்களுக்கான வாக்கெடுப்பு இன்று பாராளுமன்றத்தில் இடம் பெறும். ஸ்ரீ

## நேற்று ..

கிரனைட்-3,ஐ.எம். ரவை-1100,ரீ.என்.ரீ-1,ஏ.கே மகஸின்-36,தொலைத்தொடர்பு சாதனம் ஒன்று ஆகியவைகளே விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டனவையாகும். இத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் கப்டன் திலகன் வீரமரணமடைந்தார் இவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (03)

# யாழ். ஆஸ்பத்திரியில் பல இயந்திரங்கள் பழுது

எஸ். ஆர். எம்.

அண்மையில் யாழ் கோட்டைப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதல்களால் யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள பல இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன் இக் குண்டு வீச்சுத் தாக்குதலின் அதிர்ச்சியினால் கண்ணாடிகள், கதவுகள் போன்றன மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. பொம்மர்க்குண்டுகளும் ஷெல்களும் வைத்திய சாலை வளவினுள் விழாத காரணத்தினால் கட்டடங்கள் எதுவும் சேதமடையவில்லை.

இவ் வைத்திய சாலையில் உள்ள எக்ஸ்றே இயந்திரங்கள் அதிர்ச்சியினால் பாதிப்படைந்திருக்கலாம் என அஞ்சப் படுகின்றது. சத்திர சிகிச்சைப் பகுதியின் குளிரூட்டிகள் அவசர சிகிச்சைப் பிரிவின் குளிரூட்டிகள் போன்ற பல இயந்திரங்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குண்டுகளின் அதிர்ச்சியினால் இவ் வைத்தியசாலையின் பல இயந்திரங்களின் செயற்திறன் குறைந்துள்ளதாகவம் தெரிவிக்கப் படுகின்றது. இவ் வைத்திய சாலை ஆரம்பமாகிய பின் பல சிரமங்களை எதிர் நோக்கவேண்டிவருமென தெரிவிக்கப்பட்டது. 03

### பிரச்சனை தீர்க்க

# நோக்கத்தில் நேர்மை தேவை என்கிறார் சு.க.எம்.பி.

''வடக்கு,கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நேர்மையான நோக்கம் கைக்கொள்ளப்பட வேண்டும்.'

இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் ஸ்ரீ லங்காசுதந்திரக் கட்சி எம்.பி. திரு.லஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

''சண்டை மூலம் பிரச்சனையைத் தீர்க்க முடியாது அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும்.

என்று யாழ் எம். பி திரு.நவரத்தினம் பேசுகையில் கூறினார்.(ஸ்ரீ)

## இன்று

வடக்கு-கிழக்கு மக்களின் இன்றைய நிலைபற்றியும், அதற்காக முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதற்காக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு விஞ்ஞானபீடஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

## பலாலி ஷெல் இணுவிலில்

(இணுவில்)

நேற்று நண்பகல் பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் இணுவில் பகுதியில் வீழ்ந்து வெடித்துள்ளது.

இணுவில் பூவோடை மயானத்திற்கருகில் விழுந்த இந்த ஷெல்லினால் இரு வீடுகள் சிறுசேதம் அடைந்தன மேலும் ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி அப்பகுதி மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

## மாணவர் கூட்டம்

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பொதுக்கூட்டமொன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது, (644கி,

## வந்தாரை...

பல இடங்களில் வர்த்தக மற்றும் தொழில் பாதிக்கப்பட்டுள்ளமையால் சாவகச்சேரி அதற்கு இன்று சிறந்ததோர் கேந்திர ஸ்தானமாக விளங்குகிறது· சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெளிமாவட்டங்களிலும், யாழ். மாவட்டப் பகுதிகளிலும் இருந்து சுமார் 8165 குடும்பங்கள் அகதிகளாக வந்து தங்கியுள்ளனர். 1987ல் நிகழ்ந்த யுத்தகால சூழ்நிலையிலும் பல்வேறு இடங்களின் அகதிகளுக்கும் அடைக்கலம் தந்து காப்பாற்றியது தென்மராட்சியே என்பதுநினைவு கூரத்தக்கது, (ஸ்ரீ)

### தர்மபுரம் பாடசாலை மீதான

# தாக்குதலைக் கண்டித்து மாணவர் பகிஷ்கரிப்பு

தர்மபுரம் பாடசாலை பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டித்து கிளிநொச்சி மாணவர்கள் ஒரு நாள் பாடசாலை பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த பல கிராமப் பாடசாலை மாணவர்களும் இப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்,

இந்த பொம்மர் தாக்குதலில் ஒரு ஆசிரியையும் மற்றும் நான்கு மாணவர்களும் ஸ்தலத்திலே பலியாகி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (35-கி)

## காசோலைகள் வங்கியில் ஏற்பு

இலங்கை வங்கி ஆஸ்பத்திரிவீதிக் கிளையில் நேற்று முதல் அரச திணைக்களங்களின் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படுமென வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார்.

காலை 9 மணிமுதல் 9-30 மணி வரை மட்டுமே தற்போது இவ் வங்கி இயங்கிவருகின்றது தெரிந்ததே (03)

## தேர்தல் கஷ்டமே

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தற்போதுயுத்த நிலைமை இருப்பதனால் வடக்கு கிழக்கு மாகாணசபைக்கான புதிய தேர்தலை நடாத்துவது கஷ்டமான காரியமே என அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன குறிப்பிட்டுள்ளார்.

## துயர்தனைச் ..

சேரியை வந்தடைந்தபோது உதிர்த்த வார்த்தைகள் ''நாம் இத்தனை நாட்களும் பட்ட கஷ்டங்களைச் சொல்ல வார்த்தைகளில்லை' என்பதே (ஸ்ரீ)

## போராளி ..

தொடுவாயைச் சேர்ந்தவராவார்.

இதே வேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் பரதன்(செல்வன்) என்பவரே வீரமரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.(3)

## படையின்...

செய்தியாளர் மாநாட்டில் இறந்த படையினரின் தொகை 318 என்று அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது.

## அதிகாரிக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டானநிலை

மக்களுக்கு உணவு வழங்கும் வேலைகளைக் கவனிக்கவென, பிரயாண கஷ்டங்களையும் பொருட்படுத்தாது கடமைக்குச் சென்ற அதிகாரி ஒருவர் தனது ஆவணங்களை இழந்து பரிதாப நிலைக்கு உள்ளாகியுள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவு உதவி ஆணையாளருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இவர் கொண்டு சென்ற அலுவலக காசோலைப்புத்தகம், மற்றும் முக்கிய தஸ்தாவேஜூக்கள் அடங்கிய ஆலுவலகப்பை யாழ் நகருக்கும் தனங்கிளப்புக்கு மிடையேதவறிவிட்டது.

கண்டெடுத்தவர் தந்துதவுமாறு கேட்டுள்ளார். (ஸ்ரீ)

## 40 லட்சம் நஷ்டம்

வடபகுதிக்கான யாழ், தேவி ரயில் சேவை நிறுத்தப்பட்டதினால் புகையிரதப் பகுதிக்கு 40 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாம் ..

பின்னரே இரண்டாம் கிழமைக்கான கொடுப்பனவு வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

தற்போது யாழ்மாவட்டத்தில் 341 அகதிமுகாம்களில் 43,558 குடும்பங்கள் அகதிகளாக தங்கியுள்ளன. (03)

## கதிரவெளியில்...

ராகும் நிர்மலாதேவி(6) கந்தன்(60) ஆகியோர் உட்பட பலர் படுகாயமடைந்துள்ளனர்.

அத்துடன்கல்லடி இராணுவ முகாமில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே ஏற்பட்ட நேரடி மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளார்கள்.(03)

[illegible]ப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு [illegible]க்குவீதி[illegible] உள்ள அச்சகத்தில் 06-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,